Kanton Zürich
Bildungsdirektion
Volksschulamt

# சூரிச் மாநில கட்டாயப்பாடசாலை

## பெற்றோர்களுக்கான தகவல்

பாடசாலையானது சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் அவர்களின் அன்றாட வாழ்க்கையில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியாகும். இது குடும்பத்தினரது வளர்ப்பினை பூரணப்படுத்த பெரிதும் உதவுகின்றது. பாடசாலையில் உங்கள் பிள்ளை பல்வேறு மதிப்புமிக்க கற்றல், வாழ்க்கை அனுபவங்களை பெற்றுக்கொள்கின்றது. அனைத்து சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் கல்வி கற்க உரிமையுண்டு. பாலர்பாடசாலையும் பாடசாலையும் நீங்கள் வசிக்கும் இடத்தில் இலவசமானவை. பெற்றோர் பாதுகாவலராகிய நீங்கள் பாடசாலைகள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் அவர்கள் தமது பணிகளை சிறப்பாக நிறைவேற்ற உதவும். நீங்கள் அனைவரும் இணைந்து ஒன்றாக செயல்படுவதன் மூலம் சிறுவர் மற்றும் இளைஞர்களின் பொறுப்பை கூட்டாக பொறுப்பெடுக்க முடியும். அன்றாட பரஸ்பர கருத்து பரிமாறல் மூலமும் கலந்துரையாடல் மூலமும் உங்கள் பிள்ளைகள் சரியான உதவிகளை பெற்று பாடசாலைக்கல்வியில் முன்னேற உதவுதல் சிறந்தது.

## பாடசாலையின் இலக்கும் கடமையும்

சூரிச் மாநில கட்டாயபாடசாலையானது ஜனநாயக அரசின் அடிப்படை விழுமியங்களை பின்பற்றுகின்றது. இது அரசியல் மற்றும் மத சார்பற்றது. எமது கலாச்சாரத்தையும் சமூகத்தினையும் நன்கு புரிந்து கொள்வதற்கு மனித நேய, ஜனநாயக விழுமியங்களைப்பற்றிய அடிப்படை அறிவு உங்கள் பிள்ளைக்கு அவசியமானது. உங்கள் மத சுதந்திரமும் உங்கள் சிறுவர், இளைஞர்களினது மதசுதந்திரமும் எப்போதும் மதிக்கப்படும்.

கட்டாய கல்வி பயிலும் காலத்திலே உங்கள் சிறார்களும் இளைஞர்களும் அடிப்படை அறிவு மற்றும் திறன்களை பெற்று அவற்றை வளர்த்துக் கொள்வதுடன் அவர்கள் மேல்நிலை பள்ளிகளிற்கு செல்ல தயார்ப் படுத்தப்படுகிறார்கள். கட்டாயப்பாடசாலையானது சகமனிதர்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் மதிப்பளிக்க ஊக்குவிக்கின்றது. அதனூடாக உங்கள் சிறார்களும் இளைஞர்களும் சுயாதீனமாக இயங்கக்கூடியவர்களாகவும் பொறுப்புமுள்ளவர்களாகவும் வளர்ந்து சமுதாயத்தில் அவர்கள் தமக்கான இடத்தை அடையாளம் காண உதவுகின்றது. கட்டாயக்கல்வியானது பொதுவாக பதினொரு வருடங்களாகும். இதனை தனியார் பாடசாலையிலோ அல்லது பிரத்தியேக கல்வியூடாகவோ (வீட்டில்பாடசாலை-ஹோம்ஸ்கூல்) பூர்த்தி செய்ய முடியும்.

## சூரிச் மாநில கட்டாயப்பாடசாலையின் தோற்றம்



## பள்ளிப்படிப்பை தொடங்குதல்

உங்கள் பிள்ளை ஒரு வருடத்தின் ஆடி மாதம் 31 ம் திகதிக்கு முன்பு நான்கு வயது நிரம்பியதாக இருப்பின் அது அடுத்து வருகின்ற பள்ளியாண்டில் அப்பிள்ளை வசிக்குமிடத்திலுள்ள பாலர்பாடசாலைக்கு செல்லலாம். பாலர்பாடசாலைக்கான வகுப்புபிரித்தலை பாடசாலை உயர்நிர்வாகம் (Schulpflege) மேற்கொள்ளும்.

## பள்ளியாண்டு

பள்ளியாண்டானது ஆவணி மாதம் ஆரம்பித்து அடுத்த ஆண்டு ஆடி மாத நடுப்பகுதியில் நிறைவுறும். உங்கள் பிள்ளைக்கு ஒரு கல்வியாண்டில் 13 கிழமைகள் விடுமுறை உண்டு. அவையாவன இலையுதிர்காலம், கிறிஸ்மஸ் காலம், விளையாட்டு, வசந்தகாலம் மற்றும் கோடைகால விடு-முறைகள்.

## ஒரு பாடசாலை நாள்

அனைத்து பிள்ளைகளிற்கும திங்கள் தொடக்கம் வெள்ளி வரை வகுப்பு அல்லது பராமரிப்பானது முற்பகல் 8 தொடக்கம் 12 மணி (நிலையான நேரம்) வரை இருக்கும். மாலை நேரங்களில் ஒருசில வகுப்புகளுக்கு தனிப்பட்ட நேர அட்டவணை உண்டு. உங்கள் பிள்ளை நேரத்திற்கு சமூகமளிப்பது நேரஅட்டவணைக்கேற்ப செல்வது ஆகியன பெற்றோராகிய உங்களின் பொறுப்பாகும். பாடநேரம் தவிர்ந்த பகல்வேளைகளில் பராமரிப்பு ஏற்பாட்டினை நகரசபை நிர்வாகம்(புநஅநனைநெ) வழங்குகின்றது. குறித்த பராமரிப்புகளுக்கு பணம் செலுத்தப்பட வேண்டும்.

## பாலர்பாடசாலை இரண்டு வருடங்களாகும்

உங்கள் பிள்ளை முதல் இரண்டு வருடங்களையும் பாலர்பாடசாலையில் செலவிடுவர். இந்த இரண்டு வருடங்களில் அப்பிள்ளையின் தனிப்பட்ட வளர்ச்சிக்காக பல்வேறு வகைகளில் உதவியும் ஊக்கமும் வழஙகப்பட்டு அந்த பிள்ளையானது ஆரம்பப்பாடசாலைக்கு தயார்ப்படுத்தப்படுகின்றது. பாலர்பாடசாலையில் உரையாடுவதற்கு சுவிஸ்ஜேர்மன் பேச்சுமொழி(சுவிஸ் டொச்) பயன்பாட்டில் உள்ளது.

## ஆரம்ப பாடசாலை ஆறு வருடங்களாகும்

ஆறு வயதில் உங்கள் பிள்ளை ஆரம்பப்பாடசாலைக்கு சேர்த்துக்கொள்ளப்படுகின்றது. இங்கு அனைத்துப் பிள்ளைகளும் நாடு, பால் மற்றும் கல்வித்திறமைகள் வேறுபாடின்றி ஒன்றாக பயிலு-வார்கள். மூன்று வருடங்களின்பின் அவர்களின் வகுப்பிற்கு பொறுப்பான ஒரு ஆசிரியரிடம் மாற்றப்படுவார்கள். அப்போது வகுப்பும் புதிதாக பிரிக்கப்படும்.

ஆரம்பப்பாடசாலையில் உங்கள் பிள்ளைகளுக்கு வாசிப்பு, எழுத்து, எண்கணிதம் ஆகிய திறன்கள் விருத்திசெய்யப்பட்டு மேம்படுத்தப்படுவார்கள். மேலும் இங்கு வடிவமைப்பு, இசை, உடலசைவும் விளையாட்டும், இயற்கை, மனிதன், சமூகமும் மதங்களும், கலாச்சாரம், நெறிமுறைகளும் ஊடகங்களும் மற்றும் கணனி ஆகியனவும் கற்பிக்கப்படும். இரண்டாம் வகுப்பிலிருந்து ஆண்டில் இரு தடவை மாணவர் தேர்ச்சியறிக்கை வழங்கப்படும். இந்த அறிக்கையில் உங்கள் பிள்ளையின் வேலைகள், கற்றல், செயல்திறன்கள், சமூகநடத்தைகள் பற்றிய ஆசிரியரின் கருத்துக்கள் உள்ளடக்கப்படும்.

அறிவுசார் அல்லது தனிப்பட்ட வளர்ச்சியில் உதவி தேவைப்படும் பிள்ளைகள் இதனை விசேட ஒழுங்கமைப்பு மூலம் பெற்றுக்கொள்ள முடியும். திறமைவாய்ந்த மாணவர்களை ஊக்குவிப்பதும் இதில் அடங்கும். எவ்வாறான ஒழுங்கமைப்பு தேவையென்று பாடசாலையானது பெற்றோரது சம்மதத்துடன் முடிவெடுக்கும்.

உங்கள் பிள்ளை ஆறு வருட ஆரம்பப்பாடசாலையின் பின்னர் மேல்நிலைப்பள்ளிக்கு (செக்குண்டார் வகுப்பு) செல்லும். ஜேர்மன் (டொச்) மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் உங்கள் பிள்ளைக்கு சிறப்பு திறமைகளிருப்பின் அப்பிள்ளை கிம்னாசியத்திற்கு விண்ணப்பிக்கலாம். இதற்கான நுளைவுத் தேர்வில் சித்தியடைந்தோரே அனுமதியினை பெற்றுக்கொள்வார்கள். இவ்வாறு தேர்வாகும் பிள்ளை கட்டாயபாடசாலையிலிருந்து விலகி கிம்னாசியத்தில் இறுதி மூன்று வருட கட்டாயக்கல்வியை தொடரும்.

## மூன்று ஆண்டு மேல்நிலைப்பள்ளி(செக்குண்டார் வகுப்பு) இரண்டு அல்லது மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படும்

மேல்நிலைப்பள்ளியில் (செக்குண்டார் வகுப்பு) உங்கள் பிள்ளை ஆரம்பப்பாடசாலையில் கற்ற மற்றும் தெரிந்த விடயங்களை ஆழமாகவும் விரிவாகவும் கற்றுக்கொள்ளும். மேலும் இயற்கையும் தொழில்நுட்பமும், பொருளாதாரம், தொழில்சார் கல்வி மற்றும் மனையியல் போன்றவை கற்பிக்கப்படும். மேல்நிலைப்பள்ளியானது(செக்குண்டார் வகுப்பு) உங்கள் பிள்ளையை தொழில்சார்கல்வி அல்லது தொடர்ந்துவரும் பாடசாலைகல்வியை தொடர தயார்ப்படுத்துகிறது. இளைஞர்களை சரியான பாதைக்கு செல்வதற்கு உதவியாக அவர்கள் இரண்டு(A,B) அல்லது மூன்று (A, B, C) பிரிவுகளாகப் பிரிக்கப்படுவர். இது நகரசபையை பொறுத்து வேறுபடும். பிரிவு A ஆனது பிள்ளையிடமிருந்து மிகக்கூடுதலான கற்கும் திறமையை எதிர்பார்க்கின்றது. சிலபாடங்களில் மேலதிக பிரிவுகளாக I, II, III என பிரிப்பர். இது நகரசபையை பொறுத்து மாறுபடும். பிரிவு III உடன் ஒப்பிடும் போது பிரிவு ஐ ஆனது பிள்ளையிடமிருந்து மிகக்கூடுதலான கற்கும் திறமையை எதிர்பார்க்கின்றது.

## கட்டாயப்பாடசாலையின் பின்பு

மூன்று வருட மேல்நிலைப்பள்ளி (செக்குண்டார் வகுப்பு) முடிந்ததும் இளைஞர்களுக்கு தொழில் சார்ந்த அடிப்படைக்கல்வி (Berufsbildung) அல்லது மத்தியகல்லூரி (Mittelschule கிம்னாசியத்துடாக) ஆகிய இரண்டு வகையான கல்விப்பாதைகள் உண்டு. இரண்டில் மூன்று பங்கு மாணவர்கள் இரண்டுவருட / மூன்றுவருட / நான்குவருட தொழிற்கல்வியை தேர்ந்தெடுக்கின்றனர். உங்கள் பிள்ளை அதிக திறமைகளை கோரும் வேலையை செய்ய ஆர்வம் உள்ளதாக இருப்பின் அது கிம்னாசியம் / தொழில்நுட்பக் கல்லு ரி(Berufsmaturitätsschule) / வர்த்தகத்துறை மற்றும் கணனித்துறைக்கல்லூரி (Handels- und Informatikmittelschule) / உயர்நிலைப்பள்ளி டிப்ளோமா (Maturitätsabschluss) போன்றவற்றில் ஒன்றினைத் தெரிவுசெய்யலாம். அல்லது கிம்னாசியமத்துரா (gymnasiale Maturität), தொழில்மத்துரா (Berufsmaturität), பாடத்திற்குரியமத்துரா (Fachmaturität) போன்றபாதைகளில் ஒன்றினை தெரிவு செய்யலாம். மூன்று மத்துராக்களும் உங்கள் பிள்ளை உயர்கல்வி(Fach) Hochschule ஒன்றினைக் கற்க வழிவகுக்கும். தொடர்ந்து வரும் உயர்கல்வியை அவர்கள் வேலைசெய்யும் காலப்பகுதியிலும் தொடர வாய்ப்புகளுண்டு. அனைத்து வகையான கல்விப்பாதைகளும் இளைய சமுதாயத்தினருக்கு பலவகையான உயர்கல்விக்கான வழிமுறையை ஏற்படுத்திக்கொடுக்கும்.

## அரச கட்டாயப்பாடசாலைகளும் அதன் சேவையும்

### பாடசாலை அமைவிடமும் செல்லும் பாதையும்

உங்கள் பிள்ளை அது வசிக்குமிடத்திலுள்ள கட்டாயப்பாடசாலைக்கே செல்லும். எந்தப்பாடசாலையென்பதை உங்கள் பிள்ளை வசிக்குமிடத்திலுள்ள பாடசாலை உயர்நிர்வாகம் (ளுஉாரடிகடநபந) தீர்மானிக்கும். உங்கள் பிள்ளைககான வகுப்பு எது என்பதை பாடசாலை நிர்வாகமானது தீர்மானிக்கும். பொதுவாக உங்கள் பிள்ளை பாடசாலைக்கு தானாகவே தனிய சென்று வரும். பாடசாலை சென்று வரும்போது உங்கள் பிள்ளை சமூகத்துடனான அனுபவங்களை பெறுகின்றது. உலகைப்புரிந்து கொள்ளவும் சக மாணவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளவும் வழிவகுப்பதால் இது அவர்களின் ஆளுமையை படிப்படியாக மேம்படுத்த உதவுகின்றது.

### பாடநேரமும் (நிலையான நேரம்-Blockzeiten) நாட்கட்டமைப்பும்

பாடநேரம் அல்லது பராமரிப்பு நேரமானது முற்பகல் 8 மணி தொடக்கம் 12 மணி வரையாகும். கல்வி உயர்நிர்வாகமானது (Schulpflege) இந்த நேரத்தை ஒழுங்கமைப்பு காரணங்களுக்காக ஆகக்கூடியது 20 நிமிடங்களால் குறைக்க முடியும். மதிய இடைவேளை மற்றும் பிற்பகல் வகுப்புகள் போன்றவற்றை நகரசபையானது அந்தந்த இடங்களுக்கேற்ப தீர்மானிக்கும். மதிய இடைவேளை நேரமானது உங்கள் பிள்ளை வீட்டிற்கு சென்று உணவருந்தி திரும்புவதற்கு போதுமானதாக இருக்கும். நகரசபையானது தேவை ஏற்படின் நாட்கட்டமைப்பிற்கான நேரத்தை உயர்த்துவடன் (காலை / மதியம் / மாலை நேர பராமரிப்பு) இந்த மாற்றத்திற்கேற்ப 7.30 மணி தொடக்கம் 18 மணிக்குமடையில் பாடசாலைநேரத்தில் தேவையான சலுகைகள் கிடைக்கப்பெறுவதை ஏற்பாடு செய்யும். நிலையான நேரம் தவிர்ந்த நேரத்திலுள்ள பராமரிப்பிற்கு பணம் செலுத்தப்பட வேண்டும்.

### விசேட முன்னேற்ற உதவி

பொதுவாக உங்கள் பிள்ளைக்கு குறிப்பிட்ட சில பகுதிகளில் விசேட முன்னேற்ற உதவிகள் கிடைக்கப்பெற்று வந்தாலும் அப்பிள்ளை சாதாரண வகுப்பிலேயே கல்வியை தொடரும். உங்கள் பிள்ளைக்கு ஜேர்மன் மொழியை விளங்கும் தன்மைக்குறைவு, கற்றல் பிரச்சனைகள் அல்லது குறைபாடுகள் போன்றனவற்றிற்கு மட்டுமன்றி பிள்ளையின் விசேட திறமைகள் மற்றும் பலங்கள் போன்றவற்றிற்கான முன்னேற்ற உதவிகளும் அந்தந்த துறைநிபுணர்கள் மூலம் வழங்கப்படும். உங்கள் பிள்ளைக்கு வகுப்பில் அனைவருக்குமுரிய சமமான வாய்ப்புகள் பெறவும் மேலும் தேவைக்கேற்ப பிரத்தியேக உதவிகள் பெறவும் உரிமை உண்டு. சாதாரண வகுப்புகள் மட்டுமன்றி மேலதிகமாக உங்கள் பிள்ளைக்கு அவரவரின் தேவைக்கேற்ப பிரத்தியேக உதவிகளான ஒருங்கிணைந்த முன்னேற்ற உதவி (Integrative Förderung), சிகிச்சைப்பயிற்சிகள் (Therapien) உடலசைவு சிகிச்சைப்பயிற்சி(Psychomotorik), பேச்சு பிறழ்வு சிகிச்சைப்பயிற்சி

(Logopädie), உளவியல் சிகிச்சைப்பயிற்சி (Psychotherapie), செவிப்புலன் குன்றியவர்களிற்கான சிகிச்சைப்பயிற்சி (Audiopädagogik), ஜேர்மன்மொழி இரண்டாவது தாய்மொழியாக உள்ளோர், இணைந்த தன்னார்வ கலாச்சார மற்றும் தாய்மொழி வகுப்புகள், ஒருங்கிணைந்த சிறப்புப்பயிற்சி, விசேடபாடசாலை, மருத்துவமனை மற்றும் கிளினிக்பாடசாலை மற்றும் சில கெமைண்டெகளில் திறமையினை மேம்படுத்துவதற்கான விசேடவகுப்புகள் (ஆரம்ப-சிறிய மற்றும் நுளைவுவகுப்புகள்) ஆகியன வழங்கப்படும். இவ் உதவிகள் தேவைக்கேற்ப சாதாரண வகுப்பில் அல்லது பிரத்தியேக இடத்தில் வழங்கப்படும்.

## ஆரோக்கியம்

உங்கள் பிள்ளையின் உடல், உள ஆரோக்கியம் மிகவும் முக்கியமானது. பாடசாலை வைத்தியர் குழு, பல்முற்காப்பு உதவி, பாடசாலை உளவள உதவி, பாடசாலை சமூகசேவைப்பிரிவு போன்றன ஆரோக்கியம் தொடர்பான உதவிகளை பாடசாலைக்கு வழங்குகின்றன. அனைத்துப்பிள்ளைகளும் பல் மற்றும் மருத்தவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். இவை கட்டாயமானவை. அது மட்டமல்லாது போதுமான உடலசைவும் ஆரோக்கியமான உணவும் சிறுவர் மற்றும் இளைஞர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றன. பாடசாலையானது வகுப்பு நேரத்தில் வழங்கப்படவுள்ள உடல்நலம் சார்ந்த விடயங்களை பெற்றோருக்கு தெரியப்படுத்தும். இதற்கு பாட-சாலையானது வெளியிடத்திலிருந்தும் நிபுணர்களை வரவழைக்கும், உதாரணமாக போக்குவரத்து சம்பந்தமான அறிவுரைகள், உடலசைவு மேம்பாடுகள், பாலியல் சம்பந்தமான அறிவுரைகள்.

## பெற்றோரும் கட்டாயப்பாடசாலையும்

மாணவ மாணவியரது கல்வியும் வளர்ப்பும் பாடசாலையினதும் வெற்றோரினதும் பொதுவான குறிக்கோளாகும். பாடசாலையில் பிள்ளையின் வெற்றிக்கு ஒரு முக்கோண வடிவ ஒத்துழைப்பு அதாவது பாடசாலை - பெற்றோர் - மாணவர் முக்கியமாகும். பாடசாலையானது உங்கள்பிள்ளையின் நடத்தை மற்றும் செயல்திறன்பற்றி பெற்றோராகிய உங்களுக்கு கிரமமாக தெரிவிக்கும். இங்கு பெற்றோருக்கு வகுப்பின் மாலை ஒன்றுகூடல், பெற்றோர்கல்வி, கற்றல் திட்டவாரம், அனை-வருக்குமான திறந்த நாள், விளையாட்டிடங்களில் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகள் போன்ற நிகழ்வுகளினூடாக பெற்றோரும் இணைந்து கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர். பெற்றோர் இவ்வாறான நிகழ்வுகில் பங்கேற்பது கட்டாயமானதல்ல. இருப்பினும் சிலநிகழ்வுகளில் பெற்றோர் கட்டாயமாக கலந்கொள்ள வேண்டுமென பாடசாலை நிர்வாகம் அல்லது பாடசாலை உயர்நிர்வாகம் அழைப்பு விடுக்கும். ஒருவரை பணியமர்த்தல் அல்லது பணி நீக்கம் செய்தல் போன்ற பாட-சாலையின் தீர்மானங்களில் பெற்றோரர் பங்கேற்க முடியாது. பெற்றோராகிய நீங்கள் உங்கள் பிள்ளையை வளர்ப்பதற்கு மட்டுமன்றி ஒழுங்கான பாடசாலை வரவு,

பாடசாலையால் வழங்கப்படும் குறித்த வேலையை நிறைவேற்றுதல் ஆகியவற்றிற்கும் பொறுப்பாவீர்கள். உங்கள் பிள்ளையின் நடத்தை மற்றும் அப்பிள்ளையினது சூழலில் நடக்கும் குறிப்பிட்ட நிகழ்வுகள் பற்றி பெற்றோராகிய நீங்கள் ஆசிரியருக்கோ அல்லது பாடசாலை நிர்வாகத்திற்கோ தெரிவிப்பது சிறந்தது. உங்கள் பிள்ளையின் கல்விப்பாதையில் எடுக்கப்படும் முக்கியமான முடிவுகள் பற்றி பாடசாலையானது பெற்றோராகிய உங்களுடனும் பிள்ளைகளுடனும் கலந்தாலோசிக்கும். பாடசாலை சார்ந்த பயணங்களின் போது பிள்ளைக்கு பொருத்தமான உடை உபகரணங்களை வழங்குவது பெற்றோராகிய உங்கள் கடமையாகும். உங்கள் பிள்ளை மாணவ மாணவியராக தமது பாடசாலை நிகழ்வுகளில் கிரமமாக பங்குபற்றி தமக்கான கடமைகளை பூர்த்தி செய்தல் வேண்டும். கட்டாயப்பாடசாலையில் மாணவருக்கு அவரவரின் வயதிற்கேற்ப பொறுப்புகளை தீர்மானிக்கவும் அவற்றில் பங்கேற்கவும் உரிமை உண்டு. வயது அல்லது வேறு காரணங்கள் தடைகளாக இல்லாதிருப்பின் அவர்கள் இவ்வாறான குறித்த முடிவுகளில் தடையின்றி பங்கேற்க முடியும்.

## பிரச்சனைகளை எவ்வாறு கையாள்வது?

ஆசிரியர்களும் பெற்றோரும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் தகவல் பரிமாற்றம் செய்துகொள்வார்கள். பெற்றோராகிய உங்களைப் பொறுத்தவரை உங்கள் பிள்ளையின் வகுப்பாசிரியரே முதலாவதாக தொடர்பு கொள்ள வேண்டியவராவர். ஆசிரியருடன் பேசி பிரச்சனைகளை தீர்க்க முடியாது விட்டால் பாடசாலை நிர்வாகத்துடன் கலந்துரையாடலாம். அப்போதும் முடிவு காணப்படாத சந்தர்ப்பத்தில் நீங்கள் பாடசாலை உயர்நிர்வாகத்தின்(Schulpflege) அவ்விடத்திற்கான பாடசாலை அதிகாரசபை-பயை(Schulbehörden) தொடர்பு கொள்ளலாம்.

## பாடசாலை வட்டம்

### வழமையான ஒழுங்குவிதியிலிருந்து விலகுதல் (Dispensation)

உங்கள் பிள்ளை வகுப்பிற்கு சமூகமளிக்க முடியாதென முற்கூட்டியே தெரிந்தால் பெற்றோராகிய நீங்கள் இதனை பாடசாலைக்கு அறிவிப்பதற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். பாடசாலையானது சொந்த, குடும்ப மற்றும் பாடசாலை உறவை கவனத்தில் கொண்டு, போதிய காரணங்களிருப்பின் உங்கள் பிள்ளை வகுப்பிற்கு சமூகமளிக்க முடியாதென்பதை உறுதி செய்யும்.

### ஜோக்கர்நாட்கள்

உங்கள் பிள்ளை வகுப்பிற்கு சமூகமளிக்க முடியாதென்பதற்கான தகுந்த காரணத்தை தெரிவிக்காமல் ஒரு பாடசாலை வருடத்தில இரண்டு நாட்கள் ஜோக்கர் நாட்களாக எடுக்க அனுமதியுண்டு. இந்த ஜோக்கர்நாட்களை எடுக்க விரும்பினால் பெற்றோர் இதனை பாடசாலைக்கு முற்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.

## விடுமுறை

சூரிச்மாநிலத்தில் பாடசாலை விடுமுறையானது வருடத்திற்கு ஆகக்கூடியது 13 வாரங்களாகும். இதைத்தவிர கெமைண்டே மேலதிகமாக நான்கு விடுமுறை நாட்களை தீர்மானிக்கலாம். பெரும்பாலும் இவை உள்ளூர் விடுமுறை நாட்களுக்காக விடப்படும், உதாரணமாக கார்னிவல் (Fasnacht) அல்லது கில்பி (Chilbi). இத் தீர்மானமானது 14 வது வார விடுமுறைக்கு வழிவகுக்காது இருப்பது அவசியமாகும்.

## தகைமை சார்ந்த மதிப்பீடும் தேர்ச்சியறிக்கையும்

வகுப்பாசிரியர் ஒவ்வொரு பாடத்திலும் உங்கள் பிள்ளையை அப்பிள்ளையினது திறமைகள், வகுப்பு நடத்தைகள் மற்றும் முன்னேற்றம் என்பனவற்றிற்கமைய கிரமமாக மதிப்பிடுவர். உங்கள் பிள்ளை எவ்வாறு பாலர்பாடசாலை மற்றும் முதலாம் வகுப்பில் மதிப்பிடப்பட்டதோ, அவ்வாறே இங்கும் வருடத்தில் இரண்டு தடவை மதிப்பிடப்படுவதுடன் பெற்றோருடனான கலந்துரையாடலும் உண்டு.

## பெற்றோர் எவ்வாறு தகவல் பெற்றுக்கொள்ள முடியும்?

பெற்றோராகிய நீங்கள் எப்போதும் முதலாவதாக உங்கள் பிள்ளையின் வகுப்பாசிரியரை தொடர்பு கொள்ளுங்கள். முக்கிய தகவல்களைப்பற்றியும் பள்ளிவைத்தியர்சேவை அல்லது பாடசாலை உயர்நிர்வாகத்தினது சேவைகள் பற்றியும் நீங்கள் வசிக்குமிடத்திலுள்ள உள்ளுர் பாடசாலை நிர்வாகத்திடம் (Schulverwaltung) பெற்றுக்கொள்ளலாம். இப்போது பள்ளிகெமைண்டெ இற்கு (Schulgemeinden) வலயத்தளம் உள்ளது. பாடசாலையின் வலயத்தளமானது உங்களுக்கு பல தகவல்களை தாயார்செய்து வைத்துள்ளது.

## மேலதிக தகவல்கள்

விரிவான தகவல்கள் மற்றும் முக்கிய தகவல்மையங்களின் தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றை நீங்கள் கல்வி அலுவலகம் மற்றும் கட்டாயப்பாடசாலை அலுவலகத்தினது வலயத்தளங்களில் காணலாம்:

**www.zh.ch/volksschule**
**www.zh.ch/bildungsdirektion**

**Bildungsdirektion, Volksschulamt**
**Walchestrasse 21, 8090 Zürich**
**Telefon 043 259 22 51**